# ஐந்தொழில் வல்லான் நிலை

**நமசிவாய + நமச்சிவாய — ஓர் அரிய விளக்கம்**



சித்தர் நெறி விளக்க ஆடல் வல்லான் சிலை.

# குருதேவர்

**இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 35**

[உறுப்பினர்களுக்கு மட்டும்] பதிவு: 135/83

வெளியீடு: **26—11—86** காணிக்கை: **ரூ 1-00**

# புரட்சி மயங்கக் கூடாது........4

—சித்தர் கருவூரார்

இந்த நாட்டில் உண்மையிலேயே சிறைச்சாலைகள் எவை? என்று கேட்டால் கல்விக்கூடங்கள்தான் உண்மையான சிறைச்சாலைகள் என்று துணிவுள்ளவர்கள் கூறிடுவார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த நாட்டின் வருங்காலத்தை பாழாக்குவதும் இன்றைய இளைஞர் சமுதாயத்தைச் சீரழிப்பதும் சூதாடுமிடங்களோ! குதிரைப் பந்தய அரங்கங்களோ! கலைநிகழ்ச்சிகளோ! விலைமாதர்களோ!......... அல்ல! அல்ல! அல்லவே அல்ல:- உண்மையில் இந்த நாட்டை சீரழித்து இழிவுக்கும் பழிக்கும், குறைவுக்கும், கறைக்கும் அனைத்துவிதமான கேடுகளுக்கும் உரிய -தாக்குவது இந்த நாட்டின் கல்விதான். இந்த நாட்டின் கல்வி இந்நாட்டு மக்களைச் சிறுகச் சிறுக கொலை செய்து வரும் கொடிய நஞ்சு. இந்த நாட்டைக் கெடுத்து குட்டிச் சுவராக்குவதற்கு இந்த நாட்டின் கல்வியைவிட வேறுஒன்றும் தேவையில்லை. இந்த நாட்டின் கல்வி கட்டிப் போட்டிருக்கும் நாயை அடித்துப் பழக்குவது போன்ற தோர் திட்டமேயாகும் இந்த **நாட்டுக் கல்வி** வெளிப்படையாக திட்டமிட்டு செயலாக்கப்படும் ஒரு மாபெரும் சதித்திட்டம் ஆகும். ஏனெனில் இந்த நாட்டுக் கல்வி, அறப்பப்புத்திப்படைத்த ஒழுக்கமற்ற அயோக்கியர்கள், முட்டாள்கள், ஏமாற்றுஎத்தர்கள், திருடர்கள், கொலைகாரர்கள் ... முதலியவர்களை உருவாக்குவதில் பேராற்றலுடையது. எனவே, வருங்காலத்தைக் காப்பாற்ற வேண்டுமேயானால் உடனே இந்தக் கல்வியை ஒழிப்பதுதான் வழி.........!!

மேற்கூறிய கருத்துக்கள் யாவும் என் தந்தையினுடையவை. என்னை என் தந்தை உருவாக்கினது போல் உங்களையெல்லாம் உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் எனது தந்தையின் கருத்துக்களை ஒளிவுமறைவோ! கூடல் குறைவோ!......... இல்லாமல் அப்படியே இங்கு குறித்திருக்றேன். இதனால் நான் இக்கருத்துக்களை ஒப்புக் கொள்கிறேன் என்று கருதக் கூடாது என் தந்தை நாத்திகராக, பொதுவுடைமையாளராக இருந்தும் பரம்பரையாக வரக்கூடிய சமயக்கலைகளையும், அறிவியல் கலைகளையும், தத்துவங்களையும், மரபுகளையும், பழக்க வழக்கங்களையும், கொள்கைகளையும் ...... பிறசமயச் செய்திகளையும் ...... ஒளிவு மறைவோ! கூடுதல் குறைப்போ ...... இல்லாமல் எனக்கு சொன்னார் என்பதால் தான்; நானும் அவருடைய கருத்துக்களை அப்படியே வெளியிட்டு வருகிறேன். மேலும் என் தந்தை அடிக்கடி ...... நீ நேர்மையுடன் உனது கருத்துக்களை உன்னு -டையவை என்று தெளிவாக வெளியிடவேண்டும் இல்லாவிட்டால் காலப்போக்கில் பலசிக்கல்கள் உருவாகிவிடும். என்னுடைய ஏட்டறிவு, பட்டறிவு, விருப்பு, வெறுப்பு ... முதலியவைதான் எனது கருத்துக்களை ஈன்றெடுக்கின்றன. எனவே இவை இரண்டையும் ஒருவருடையவை என்று கூறுவதால் பல குழப்பங்களும், பொய்மைகளும், கற்பனைகளும், கருத்துச் சிதைவும், சீரழிவையும் உண்டாக்கிவிடும் .........என்று கூறுவார் எனவேதான் நான் பேசும் போதும் எழுதும் போதும் அடிக்கடி என் தந்தையின் கருத்துக்கள் மிகக் கடுமையான கொச்சையான பச்சை -யான விமரிசைகளாகவே இருக்கும். அதனால் அவை எளிதில் பிறரை புண்படுத்தும்.

[தொடரும்]

# ஐந்தொழில் வல்லான் நிலை

## [நடராசர் சிலை — ஓர் அரிய விளக்கம்]

ஆடல் வல்லான்,
கூத்தர்ப் பெருமான்,
தாண்டவ மூர்த்தி,



நடராசர்,
ஆடும் பெருமான்,
மன்றுடியார்.........

.........என்று பல பெயர்கள் குருபாரம்பரியத்தில் உள்ளன. பதினெண் சித்தர்களின் உருவ வழிபாட்டுக் கொள்கையின் மிகப்பெரிய செயல் விளக்கச் சிலை. பதினெண் சித்தர்கள் படைத்த கலையழகும், தத்துவ ஆழமும் நிறைந்த அரிய சீரிய படைப்பாகும். இம்மண்ணுலகில் தோன்றியுள்ள மதங்கள் அனைத்தும் வியந்து விதந்து போற்றிப் பாராட்டி ஏற்றுக்கொள்ளும் ஓர் ஒப்புயர்வற்ற கடவுள் நிலை விளக்கச் சிலை. இச்சிலை இடம் பெறாத கலைக்கருவூலமோ, கண்காட்சியகமோ இப்புவிப் பரப்பில் எங்குமில்லை என்ற ஓர் உண்மையே போதும்.

பதினெண் சித்தர்கள் மிகச் சிறந்த சிற்பிகள் என்பதை விளக்கிட; இந்தச் சிலைதான் பதினெண் சித்தர்களின் அமுதத் தமிழ்மொழியே அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் ஆளுகின்ற அருளாட்சி மொழி என்ற பேருண்மையை விளக்குகின்றது. அதாவது தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவக்கும் இறைவா போற்றி! என்ற வாக்குக்குரிய ஈசனாக —> வாக்கீசனாக அல்லது வாகீசனாக விளங்குபவர் இந்தக் கூத்தர்ப் பெருமானாகிய நடராசரே. பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் இமயமலையின் கைபர் போலன் கணவாய்கள் வழியாகக் குடுமியும் கோவணமும் கோலும் குடுவையுமாக ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு வநததற்குப் பல நூறாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, மெய்யான இந்துமதத்தின் முழுமுதற் தலைவனாக, பரம்பொருளாக, ஈசனாக, மகேசுவரனாக, ஆதி ஈசுவரனாக, அனாதி ஈசுவரனாக, பதினெண் சித்தர் பீடத்தின் முதல் பீடாதிபதியாக, இம் மண்ணுல-கின் முதல் நிலமான கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் [The lost Lemuria] எனும் குமரிக்கண்டத்துப் பஃறுளியாற்றங்கரையில் உருவான முதல் அரசான பாண்டியப் பேரரசின் முதல் அரசனாக ... விளங்கிய சித்தர் சிவபெருமானின் வடிவத்தின் கலையழகு மிக்க சிலையாக உருவானதுதான் இந்த நடராசர் சிலை

இந்தச் சிலை ஆயிரத்தெட்டு வடிவ வேறுபாடுகளைக் கொண்டு வடிக்கப்பட்டு; அமைக்கப்பட்ட ஆலயங்களே ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள். அண்மையில் தருமபுர ஆதீனத்தின் மூலமாகப் பெரும் புலவர், மகாவித்துவான், சைவ சித்தாந்தக் கலாநிதி, திருமந்திர மேதை, திருக்குறளுக்கு உரைவளம் கண்ட பேரறிஞர் தண்டபாணி தேசிகர் தயாரித்து வெளியிட்ட **'ஆடல் வல்லான்'** என்ற புத்தகத்தில் இந்த நடராசர் சிலையின் எண்ணற்ற வடிவவகைகள் புகைப்படமாக வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை பணக்கார-னற்ற முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடற்ற சகோதரத் தத்துவ சமத்துவத்-தினை உருவாக்கக் கூடிய ஒரு மாபெரும் அரசியல் தத்துவத்தைக் கண்டறிந்த ஒரு மாமேதை காரல் மார்க்சின் கருத்தைக் கவர்ந்த பெருமை இந்தச்சிலைக்கு

[தொடர்ச்சி 6ம் பக்கம்]

# சித்தர் இராமாயணம் - 7

'சீதையின் மீது எள்முனையளவு கூட ஆசையில்லாத தன் கணவன் இராவணன், இராமனால் சந்தேகிக்கப்படுவதால்; அந்த இராமன் எப்படியும் தன் கணவனைக்கொலை செய்யத்தான் முயலுவான் என்பதால் அவனோடு போர் புரியும் போது மிகமிக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று எண்ணற்ற முறைகள் தான் வேண்டிக்கொண்டும் தன் கணவன் எச்சரிக்கையாக இல்லாமல் போய் விட்டான்' என்றும்

'தன்னுடைய தெய்வீகக் கற்புக்குரிய இராவணன் மூவுலகையும் வென்று மன்னர் மன்னனாக விளங்கிய போதும் சாதாரண மானுடனின் முறையற்ற போரால்தான் மாண்டுபோக நேர்ந்தது' என்றும்,

'தன்னுடைய கணவன் மிகச் சிறந்த அரிய பெரிய நீதிவான் எனத் தெரிந்திருந்தும் இராமன் யாரேனும் ஒரு மானுடனை அனுப்பித் தூது பேசிச் சீதையை பெற்றுச் சென்றிருக்கலாம். ஆனால் அவன் ஏதேனும் ஒரு காரணத்தை வைத்து அரக்கர்கோனையும் அரக்கர்குலத்தையும் அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டதால்தான் தன்னையும் தன் தம்பியையும் தவிர வேறு எந்த ஒரு மானுடனும் இல்லாத ஒரு குரங்குப் படையை திரட்டிக் கொண்டு வந்து அரக்கர் கோனையும் அரக்கர் சேனையையும், அரக்கர் நாட்டையும் சிதைத்துச் சீரழித்து விட்டான்' என்றும்,

'தேரேறி இறுதிப் போருக்கு அன்று காலை புறப்படும் போதுதான் நெடுநாளாக தான்மட்டும் அறிந்திருந்த இரகசியத்தை அவனும் அறிந்திருந்தான் என்பது தெரிந்திருந்தது சனகன் மகள் சீதையின் சுயம்வரப் போட்டிக்குச் சென்ற தன் கணவனிடத்தில் குருதேவர் யக்ஞவல்லி; ''சனகன் வைத்திருக்கும் வில்லை நாணேற்றுவதோ முறிப்பதோ சாதாரணம். ஆனால் நீ சீதையை மணக்க முடியுமா? என்பதை சீதையை ஒருமுறை உற்றுப் பார்த்து முடிவு செய்து விட்டு அதன் பிறகே போட்டியில் பங்கு பெற்றிடு......'' என்று கூறியிருந்ததால்தான் மிதிலை சென்ற தன் கணவன் சனகன் வைத்திருந்த வில்லைத் தொடுவதற்கு முன்னால் அவனுடைய வளர்ப்பு மகள் சீதையை உற்றுப்பார்த்து அவள் தானீன்ற மகள் என்பதையுணர்ந்து தானே தீயைமிதித்தது போல் வில்லைத் தொட்டும் தொடாமலும் இலங்கைக்குத் திரும்பி விட்டான். ஐந்திறத்தார்கள். அரக்கர்கோன் அழியப் பிறந்த அந்த மகளை அரசகுலத்தவர்கள் மணந்தாவது புதிய மாற்றம் உண்டாகட்டும், என்றெண்ணியே வாய்மூடி மௌனியாக இருந்-தார்கள். ஆனால் ஊழ்வினையும், விதியும் அரக்கர் கோன் மகளை இலங்கைக்கே கொண்டு வந்து அனைவரையும் அழித்து விட்டது' என்றும்.

தானீன்ற மகளை நான் பார்த்துவிட்டால் தன் மருமகன்தசரதன் மகனை இலங்கைக்கு வரவழைத்துப் பெருமைப்படுத்தும் திட்டம் நிறைவேறாமல் போய்விடும் என்றெண்ணியே தன் கணவன் தன் மகளை சிறையெடுத்து வந்து தனியாக அசோக வனத்தில் சிறை வைத்தான் ''அரக்கர் மகளொருத்தியால் அழிய நேரிடும் அரக்கர் கோன் வாழ்வும், ஆட்சியும், குடும்பமும்'' என்று நிமித்திகரும், ஐந்திறத்தாரும் கூறியதற்கேற்ப ஒருவேளை தன் தங்கை சூர்ப்பனகையா-லே அந்த அழிவு வந்திடுமோ என்றஞ்சினர் அவர் நெருப்பில் விழுந்த புழுவாய் இருமனத்தோடு போராடினார் தன்னழிவர், குடும்ப அழிவும் தானீன்ற மகள் சீதையால் விளைந்திடுமா? அல்லது உடன்பிறந்தவள் சூர்ப்பனகையால் விளைந்திடுமா? என்ற கவலைத்தீயாலேயே வெந்தார்'... என்றும்.

'அரக்கர் மகளொருத்தியால் அழியும் அரக்கர்கோன் வாழ்வு என்ற கணிப்பால்தான் அரக்கர்கோன் தன் தங்கையின் மானபங்கக்கோபத்தை அடக்கவும், தன் மருமகன் இராமனை இலங்கைக்கு வரவழைத்து உறவுமுறைகளை வெளிப்படுத்தி சமாதானத்தையும், நிலையான ஒட்டுறவையும் உருவாக்க நினைத்தான் தன் கணவன்' என்றும்,

'தானீன்ற மூத்த மகள் சீதை வாய்விட்டழுது இலங்கையர்கோனும் இறந்து இலங்கையும் அழிவதைத் தடுக்கவே; ஈன்ற குழந்தையை, முதல்மகளை, மூத்த மகளை சரியாகக் கூட முகத்தைப் பார்க்காமல், ஒரு முறைகூடப் பாலூட்டாமல் பெட்டியில் வைத்து விட்டதால் தான் சீதைக்குத் தாய்ப்பாசமே இல்லாமல் போய்விட்டது. ஆனால் தன் கணவன் திருக்கரத்தால் தூக்கி கண்ணீரால் நீராட்டி கண்குளிரக் கண்டு முத்தமிழ்தம் பெய்து தந்தப்பெட்டியில் வைத்து விட்டதால்தான்

தந்தையைக் கண்டதும் பாசத்தால் பஞ்சவடியிலிருந்து தன் கணவனைவிட்டுத் தானே தேரேறி வந்தாள்; வந்தவளே தீயாகி அரக்கர்கோனையும், இலங்கையையும் தீய்த்துவிட்டாள். அந்தச் சீதையை சொந்தமகள் என்று கூறுமலேயே மாளவிரும்புகின்றேன் !இந்த வண்டமர் குழலி வாழ்விழந்த என்னைத் தன்னுடைய ஈன்றெடுத்த தாயென்றும் அறியத் தேவையில்லை அந்தச் சீதை' என்றும்,

'சூர்ப்பணகை எப்போதுமே எங்கள் மீது குறைகாண்பவள் என்பதாலேயே என் கணவர் தன் மகளின் கணவனும், கொழுந்தனுமே சூர்ப்பனகையை மானபங்கப்படுத்தினர்கள் என்ற உண்மையை மூடிமறைத்து, தங்கை சூர்ப்பனகையால் அழிவதற்குப் பதிலாக தானீன்ற மகள் சீதையாலேயே அழிந்தார்' என்றும்,

'தன் மருமகன் இராமனை வியப்பூட்டி, மகிழ்வூட்டி விருந்தூட்டி மகிழவே தன் மகள் சீதையை தேரேற்றிக் கொணர்ந்த தன் கணவரின் விளையாட்டு வினையாயிற்றே' என்றும்,

'தன் மகள் சீதையை இலங்கைக்குக் கொண்டு வந்த நாள் முதல் அரக்கர் மகளே சீதை என்பதை யாரும் அறிந்திடாதிருக்க அசோகவனத்தில் சிறை வைத்தும் பயனே இல்லாமல் போய்விட்டதே. குருதேவர் ஆணை இல்லாதிருந்தால் நானும் என் கணவரும் எங்களது மூத்த மகளை இலங்கைக்குப் பேரரசியாக முடிசூட்டியிருப்போமே' என்றும்,

'நானீன்ற மகள் சீதையே என் தாலியறுபட, குங்குமம் கலைய, பூச்சரம் பறிக்கப்படக் காரணமாகிவிட்டாளே அவளாவது நல்லபடியாக வாழ முடியுமா? நான் இறந்த கணவனுக்-காகப் புலம்புகிறேன் அவள், இருக்கின்ற கணவருக்காகப் புலம்பட்டும் என் ஈமத்தீயிலே அவள் இறங்கி நடக்கட்டும். எங்களின் பாச மகளை தீ சுடாமல் இருக்கட்டும்' என்றும்,

அரக்கர்கோன் மகளை மணந்த இராமன் சேரன்மலையில் அப்பாவி மூதாட்டி சபரி எரிந்து சாம்பலாவதற்குக் காரணமாய் இருந்தது போல் இலங்கைக்கு வந்து அரக்ககுல மகளிர் கணக் கற்று தீப் பாய்ந்து சாம்பலாவதற்குக் காரணமாகி விட்டானே இந்த ஈமத்தீ கூட அவனுக்குக் கிடைக்காமல் போகட்டும் குருதேவரே, எங்கள் மகன் எங்கள் குலத்தாரையே மணந்து எங்களுக்கு இப்படியொரு அழிவு வந்திருந்தால் கூட அது, மானுடரால் அரக்கர் குலம் அழிந்தது என்ற இழிவைத் தந்திருக்காதே' என்றும்,

'குருதேவரே, எங்களுக்கு எள்ளும் தண்ணியும் இரைத்து ஈமக்கடன் செய்வது போல் எனது மகளுக்கும் மருமகனுக்கும் எப்படியாவது ஈமக்கடன்கள் செய்து இப்பிறப்பில் ஈடேற்றுங்கள் என் கோபம் கொடிது; சாபம் கொடிது; என் செய்வேன்?' என்றும்,

'என் கணவர் காலையில்தானே நான், என் மகள் சீதையைப் பார்த்தால் இறந்த மகன்களால் வந்த துன்பத்தையும் மறப்பேன் என்று கூறி மருமகன் இராமனை சிறை பிடித்துக் கொணர்வதாக வேடிக்கைபேசிச் சென்றாரே எல்லாம் வேதனையாகிவிட்டதே. குருதேவரே. மாமனுக்-கும் மருமகனுக்கும், தாய்க்கும் மகளுக்கும் நல்லுறவை உருவாக்கித் தர உங்களை வரவழைத் திருப்பதாகக் கூறினரே, நீங்கள் வந்து சேரும் முன்னரே வானுலகம் சென்று விட்டாரே' என்றும்

'வானர அனுமன் இலங்கைக்கு வந்ததுமே என்னைக் கண்டு இராமன் கூறிய சீதை நானே என்று மயங்கினன். இந்த செய்தி கேட்டபோதே ''என் மகளே சீதை' என்று உணரத் தவறி விட்டேனே' என்றும்,

'வானர அனுமன் அசோகவனத்துச் சீதையின் வடிவம், அரண்மனையில் கண்ட வண்டமர் குழலியின் மாற்று வடிவமோ!; அழுகைக்கோலம பூண்டு நடிக்கும் அரக்கர்கோமகள் சூதோ! என்று ஐயுற்ற சேதி கேட்டபோதே சனகன் வளர்ப்பு மகள் சீதை என் வயிற்றில் பிறந்த மகள் தான் என்பதையறிய முடியாமல் போய்விட்டேனே' என்றும்,

[தொடரும்]

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

உண்டு. இதே போல் இம் மண்ணுலகின் மிகப்பெரிய நாத்திகரான இங்கர்சாலின் கருத்தையும் கவர்ந்த பெருமை இந்தச்சிலைக்கு உண்டு.

இம் மண்ணுலகின் விஞ்ஞானத் துறையையே அடியோடு மாற்றியமைமைத்த விஞ்ஞான ஆராய்ச்சி மாமேதை டாக்டர் ஐன்சுடீனின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அவரின் எதிரில் எப்போதும் இருந்த பெருமையுடையது இந்தச் சிலை, இந்தச் சிலை தமிழினத்தின் இமாலயச் சாதனை, ஒவ்வொரு தமிழனும் பூரிப்போடும் பெருமையோடும் உரிமையோடும், பாதுகாத்திட வேண்டிய கலைச் சிறப்பும் கடவுட்டன்மையும் உடைய வடிவமைப்பே இந்த நடராசர் சிலை. தமிழினத்தைப் பற்றும் பாசமும் கட்டுப்பாடும் கட்டுக்கோப்பும் பல புதிய கட்டமைப்புக்களையும் பெற்று ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உடைய ஒரு புதுமைச் சமுதாயமாகத் தயாரித்திடுவதற்குப் பயன்படக் கூடிய ஒரே ஒரு பேராயுதம் பேராயுதம் இந்த ஆடல்வல்லான் சிலையே, இந்த ஆடல்வல்லான் சிலையே, இந்த ஆடல்வல்லான் சிலையே. என்றால் அது மிகையாகாது. அதாவது மதவழிப் புரட்சிக்கு நம்பிக்கையும் தெம்பும் இந்த கூத்தர்ப் பெருமானின் சிலையே, இந்தக் கூத்தர்ப் பெருமானின் சிலையே, இந்தக் கூத்தர்ப் பெருமானின் சிலையே.

1. **"ஆடல் வல்லான் சிலை பதினெண் சித்தர்களின் தத்துவ விளக்கமே,"**
2. **"கூத்தர் பெருமான் சிலை அமைப்பு பதினெண் சித்தர்களின் கருத்தாழமிக்க கலைப்படைப்பின் உயரிய அரியநிலை"**
3. **'நடராசர் சிலை பதினெண் சித்தர்களின் செயல் நிலைச் சித்தாந் -தத்தின் தத்துவ விளக்கமே"**
4. **"பதினெண் சித்தர்களின் சிவ தாண்டவமூர்த்திச் சிலை அண்ட பேரண்ட இயக்க விளக்கமே."**
5. **"சிவபெருமானின் நடனக்கோலச் சிலை பதினெண் சித்தர்களின் அருளுலக விளக்கமே"**

.........என்ற இந்த ஐந்து கருத்து விளக்கச் சுருக்க வாசகங்கள்' (definitions) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதிவரும் குருபாரம்பரியத்திலும் (The Religious History), இலக்கிய பாரம்பரியத்திலும் (History of the Language and Literature) அரச பாரம்பரியத்திலும் (The Political Histroy) மற்ற வாக்குகளிலும் வாக்கியங் -களிலும், வாசகங்களிலும் பல இடங்களில் வருகின்றன. எனவேதான், 'இந்து மதத்தைப் புரிந்து கொள்ளுங்கள்' 'சித்தர்நெறியைப் புரிந்து கொள்ளுங்கள்' 'பதினெண் சித்தர் தத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள்! என்ற தலைப்பின் கீழ் கடந்த இரண்டு மூன்று நூற்றுண்டுகளாக எண்ணற்ற அறிவிப்புக்களும், அறிக்கை களும், அறிவிக்கைளும், சிறியபெரிய கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

[தொடரும்]

# அன்புள்ள சேவகனுக்கு........!

அன்புச் சேவக!

உனக்கு யாமெழுதியுள்ள ஆயிரத்துக்குப் மேற்பட்ட அஞ்சல்கள் நம்மிருவரின் தோழமையையும், நட்பையும் மட்டும் விளக்குவனவாக இல்லை. இவை, வரலாற்று முதன்மையும், சிறப்பும் புகழும் பெறுபவை இவை. இந்தப் புவிப்பரப்பின் அறியாமை, புரியாமை, தெரியாமை, இயலாமை, இல்லாமை, கல்லாமை, பொல்லாமை, மாயை, மயக்கம், குழப்பம், கலக்கம்........ முதலிய அனைத்தையும் தெளிவுபடுத்தும் ஒளிப்பெருஞ்சுடராக அருட்பெருஞ்சோதியாக! கோடைகாலப் பகலவனின் ஒளியாக!......... விளங்குகின்றன. இருந்தும், நம்மவர்களிலேயே பெரும்பாலானவர்கள் தங்களுக்கு விடுக்கப்படும் அஞ்சல்களின் பொருளாழத்தைப் புரிந்து கொள்ளாமல் புலம்புவர்களாக இருக்கிறார்கள்.

நண்ப! முன்பெல்லாம் தி க வில் பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் கலைஞர் கருணாநிதி..... போன்றவர் பொதுக்கூட்டம் பேசவந்தால்; கூட்டத்துக்குப் பல மணி நேரத்துக்கு முன்பிருந்தே கொள்கை, விளக்க நூல்கள், உலகப் பேரறிஞர்கள், மாவீரர்கள், புரட்சிக்காரர்கள் ...முதலியோரின் வரலாற்று நூல்கள்; தமிழின மன்னர்கள், புலவர்கள், பல்கலைவாணர்கள் முதலியோரின் சாதனைகளையும் போதனைகளையும் விளக்கும் நூல்கள்... முதலியவை கடை விரித்து விற்கப்படும். பொதுக்கூட்டத்தில் பேசுபவரனைவருமே பொதுமக்களைத் தங்களது கழக வெளியீடுகள், 'மலிவு விலையில் கிடைக்கும் புத்தகங்களாகவும்; அரிய பெரிய பயன்மிகு நூல்களாகவும்; அறியாமை அகற்றும் கதிரொலியாகவும் .... விளக்கி விளம்பரம் செய்து; வாங்கிப்படிக்குமாறு வேண்டுகோள் விடுப்பார்கள். ஆனால் இன்றைய நிலையில எந்தச் சமய, சமுதாய, அரசியல் கட்சிகளும் துணிவோடு தங்களுடைய கருத்தை, கொள்கையை, குறிக்கோளை ... விளக்கும் நூல்களை அச்சிடுவதும் இல்லை ஒருவேளை தவிர்க்க முடியாத காரண காரியங்களால் ஒரு சில நூல்களை அச்சிட்டாலும் அவற்றைப் பொது கூட்டங்களில் விளம்பரம் செய்து விற்பதில்லை. அதாவது, அச்சிட்ட நூல்களைப் பெயரளவில் சிலருக்கு வழங்கிவிட்டு மற்றவற்றைத் தாங்களே முடக்கி வைத்திடும் பழக்கத்தைத்தான் பெரும்பாலான அரசியல் கட்சிகள் செய்கின்றன. இப்படியாக ஏறத்தாழ எல்லாக் கட்சியுமே 'தனது கொள்கை இதுதான்'; 'தனது குறிக்கோள்கள் இவைதான்'; 'தனது செயல் சித்தாந்தங்கள் இன்னவைதான்' என்று வெளிப்படையாகவும், நேரடியாகவும், தெளிவாகவும் விளக்கிக் கூற முடியாதவைகளாகவும் இயலாதவைகளாகவுமே இருக்கின்றன. அதாவது இன்றைய நிலையில் ஏறத்தாழ எந்தக் கட்சிக்குமே கொள்கை கிடையாது! குறிக்கோள் கிடையாது! செயல் சித்தாந்தம் கிடையாது! என்பதுதான் உண்மை ஆனால், எல்லாக் கட்சிகளிலும் தலைவர்கள் பலராகவும், சிலராகவும் இருக்கின்றார்கள்; தொண்டர்களும் தேவையான அளவு இருக்கிறார்கள் இதெப்படி முடிகிறது என்றால் 'தனிமனிதச் செல்வாக்கும புகழும் கட்சிகளை வளர்க்கின்றன.

இப்படித் தனிமனிதச் செல்வாக்கினால்தான் கட்சிகள் வளர்க்கப்படுகின்றன என்ற பேருண்மை மத்திய அரசிலும், மாநில அரசிலும நிலவுகின்றன எனவேதான் எந்தக் கட்சியும் தொண்டர்கள் எடுக்கும் முடிவின் படி இயங்கவில்லை அதாவது ஏறந்தாழ எல்லாத் தனிமனிதர்களின் கட்சிகளுமே சொந்த விருப்பு வெறுப்புக்களாலேயே நிகழும் கட்சியாகத்தான் இருக்க நேரிடுகிறது இயங்குகின்றனவாகவே இருக்கின்றன எனவே எந்தக்கட்சியாலும் நம் நாட்டு மக்களுகக நிலையான நன்மைகள் திட்டவட்டமாக உருவாக்கிட முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! எனவே தான் தத்துவத்தையோ, தொண்டர்களையோ நம்பாமல் சில தனிமனிதர்களே நம் நாட்டுக் கட்சிகளை நடத்துகிறார்கள் அதாவது நமது நாட்டுக் கட்சிகள் அனைத்துமே 'தனிமனிதச் சொத்துக்களாகவோ', அல்லது 'ஒரு சிலரின் கூட்டுச் சொத்தாகவோ, தான் இயங்குகின்றன. எனவேதான், நம் நாட்டு மக்களின் நலனுக்காக எந்தக் கட்சியுமில்லையென்பதை புரிந்த நம் நாட்டு மக்கள் எந்தக் கட்சியிடத்தும் நமபிக்கையோ! ஆர்வமோ வளர்த்துக் கொள்ளாமல் ஏனோதானோ என்று வாழுகிறார்கள். இந்த அவல கேவல நிலைகளைப் புரிந்து நமது இயக்கத்தவர்கள் அதிக அக்கறையுடனும் ஆர்வத்துடனும செயல்பட்டு நமது இயக்கத்தைப் பொது மேடைப் பேச்சுகளின் மூலமும்;

தொடர்ச்சி 10-ம் பக்கம்

# 'சைவ சித்தாந்த சாத்திரங்களே மெய்யான இந்துமத சாத்திரம்'

பதினெண் சித்தர்களின் ''சீவநெறி'' எனும் இந்துமத விளக்கம்
[சீவநெறி —> சிவநெறி —> சைவநெறி]

## ஞாலகுரு சித்தர் கருவூரார் எழுதப்பட்டுவரும் இந்நூலின் முன்னுரையில் ஒரு பகுதி

அருள் நந்தி சிவாச்சாரியாரைப் பற்றிப் பல ஆயிரம் பக்கங்களில் வரலாற்று நூல்களை எழுதினாலும் கூட அவருடைய அருமை பெருமைகளைப் பற்றியும், சாதனை போதனைகளைப் பற்றியும் முழுமையாக எழுதி முடித்த நிறைவு யாருக்குமே வராது. ஏனென்றால், ஆற்று நடுவில் உள்ள மணற்கேணியில் இறைக்க இறைக்க தண்ணீர் ஊறுவது போல; அருள் நந்தி சிவாச்சாரியாரின் வரலாற்றை எழுத எழுத தமிழகத்துக்கும், தமிழினத்துக்கும் பொற்காலமான அருட் பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் பல்வேறு வகையான துறைகளின் நிலைகளைப் பற்றிய செய்திகள் வந்து கொண்டேயிருக்கும், வந்து கொண்டேயிருக்கும், வந்து கொண்டேயிருக்கும்.

அதாவது பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்தின் காலக் கணக்கீட்டு அடிப்படையில் பார்த்தால் 'கடலுள் மறைந்த' இளமுறியாக் கண்டமெனும் குமரி கண்டத்துத் தமிழகத்திலிருந்து கி. பி. 785 இல் முதல் விசயாலயன் பட்டமேறிய நாள் வரை உள்ள 43,71,000 ஆண்டுகளுக்கு உரிய தமிழகத்தின் உயர்ச்சி நிலைகளையெல்லாம் கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய வாழ்ந்த அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் காலச் சாதனைகளில் காணமுடிகின்றது. இதற்கெல்லாம் காரணம் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக்கருவூரார் அவர்களும், அவரது மகனை கருவூர்த் தேவர் அவர்களும், பேரனை திருமாளிகைத் தேவர் அவர்களுமே யாகும். இருந்த போதிலும், இம் மூவரும் முழுக்க முழுக்க நேரடியாக அரசியல் வாதிகளாவும், சமய மறுமலர்ச்சிக்காக பிற மண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களோடு போரிட்டுக் கொண்டேயிருந்த புரட்சிவாதிகளாகவும் இருந்திட்டனர். என்கின்ற காரணத்தினால், இவர்கள் நாதமுனியைக் கொண்டு ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்தும்; திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அவர்களைக் கொண்டு நாயன்மார்களின் பாடல்களைத் தொகுத்தும்; பல இலக்கிய ஆசிரியர்களையும் இலக்கண ஆசிரியர்களையும் கொண்டு பல இலக்கிய இலக்கணங்களைத் தொகுத்தும்; பல உரையாசிரியர்களைக் கொண்டு பழம்பெரும் இலக்கிய இலக்கணங்களுக்கு உரையெழுதியும்; தமிழ் வளர்த்து அத் தமிழின் வழியாக மெய்யான இந்து மத மறுமலர்ச்சியெனும் சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்கினார்கள், உண்டாக்கினார்கள், உண்டாக்கினார்கள்.

இந்த மூன்று பெரும் அரசியல்வாதிகளும் வாழையடி வாழையாக 'தமிழ் மொழியின் வளர்ச்சியே மெய்யான இந்துமதச் செழிச்சி' என்றும்; மெய்யான இந்துமதச் செழிச்சியே தமிழர் சமுதாய மறுமலர்ச்சி! என்றும்; தமிழர் சமுதாய மறுமலர்ச்சியே தமிழ்நாட்டு அரசியல் உயர்ச்சி' என்றும்; செயல் வழிக் கருத்து விளக்கத்தை வழங்கினார்கள். அதாவது 'மதவழிப் புரட்சியால்தான் தனி மனித வாழ்வு, குடும்பவாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கும் விழிச்சியடையும், எழிச்சியடையும் செழிச்சியடையும், கிளர்ச்சிமிகு வளவளர்ச்சி பெறும்; புரட்சிமிகு வளவளர்ச்சி பெறும்; விடுதலையுணர்வு மிக்க ஆட்சி பெறும்......' என்ற உலகப் பேருண்மையைத்தான் மேற்படி மூவரும் தங்களுடைய வாழ்வியல் போதனையாலும் சாதனையாலும் நிலைநாட்டிக் காட்டினார்கள். இதுபற்றி மூவர் தோற்ற உரையாசிரியர்கள்; மேற்படி மூவரும் (காவிரியாற்றங் கரைக் கருவூரார், கருவூர்த் தேவர், திருமாளிகைத் தேவர்) சாத்திற ஆசிரியரும், சந்தானாச்சாரியார் பீடமுமான அருள் நந்தி சிவாச்சாரியாரைப் பயன்படுத்தித்தான் அரசர்களைக் கற்கோயில்கள் கட்டுமாறும், கவிஞர்களைச் சொற்கோயில்கள் கட்டுமாறும் செய்தார்கள், செய்தார்கள், செய்தார்கள், என்று எழுதும் குறிப்புத்தான் அருள் நந்தி சிவாச்சாரியார் அவரது காலத்தில் எத்தகைய அரிய பெரிய தலைமை நிலையையும், முதன்மை நிலையையும் மேன்மை நிலையையும் பெற்றிருந்தார் என்ற பேருண்மையை விளக்குகின்றது. இன்னும் சொல்லப்போனால், அருள்நந்திசிவாச்சாரியாரால்தான் கோயில்களின் அமைப்பு முறை, கோயில் அலுவலக நிறுவனங்கள், கோயில் நிருவாக முறைகள், கோயிலில் கொண்டாடப்படும் திரு நாள்கள், விழாக்கள், கோயிலில் வளர்ந்த சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை மருத்துவக்கலை, தமிழ்ப் புலமை வகுப்புக்கள், பிற அறிவியல்களையும் கலைகளையும் கற்றுத் தரும் கல்விச் சாலைகள், ஊர்ப்பஞ்சாயத்துமுறை, நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழில் வளங்கள், மெய்யான அருட்கல்வி..... முதலியவை அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசில் நல்ல கட்டமைப்புக்களையும் ஒழுங்கான செயல்திட்டங்களையும் பெற்றிட்டன பெற்றிட்டன, பெற்றிட்டன.

'அருள்நந்தி சிவாச்சாரியாரின் பிற்காலச் சோழப் பேரரசின் நிலையான சாசனம்' என்று தோத்திரச் சாத்திர உரையாசிரியர்களும் குறிக்கும் ஒரே மாதிரியான கருத்து வாசகந்தான் அருள்நந்திசிவாச்சாரியாரை பதினோராவது, பன்னிரண்டாவது நூற்றாண்டுகளின் ஒப்பற்ற தலைவர் என்று விளக்குகின்றது. இன்னும் சொல்லப்போனால் இவரது காலம் கி.பி.1060முதல் 1282முடிய நீண்டு கிடப்பதால் இவர்தான் பதின்மூன்றும் நூற்றாண்டிற்கும் தலைவர் என்று கூறினால் அது மிகையாகாது. ''இப்படி மூன்று நூற்றாண்டுகளுக்கும் உரிய ஒப்புயர்வற்ற ஈடு இணையற்ற அறிவியல் மேதையாகவும் அருட் செல்வராகவும் சாத்திர ஆசிரியராகவும் சந்தானச்சாரிய பீடமாகவும் விளங்கிய சைவ சித்தாந்தச் செல்வரான அருள்மிகு அருள்நந்தி சிவாச்சாரியார் அவர்களை மெய்யான இந்துமதத்தின் சுருங்கிய வடிவாக வாழுமசைவ சித்தாந்திகளும், சைவ சித்தாந்த மடாதிபதிகளும் பீடாதிபதிகளும் மறந்திருப்பது தான்வேதனை, வேதனை வேதனை, தமிழினத்துக்கு வந்த சோதனை, சோதனை, சோதனை,... எனவே தான், 'அருள் நந்தி சிவாச்சாரியாரின் புகழ் பரப்புவது தான் மெய்யான இந்து மதத்துக்குரிய சாதனை, சாதனை, சாதனை,......'' என்று இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை தோற்றுவித்த சித்தர் கருவூரர் வழி வந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏனனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையவர்கள். தமிழகத்து மதவாதிகளுக்கும், மதத்தலைவர்களுக்கும் இலக்கியவாதிகளுக்கும், தமிழின ஆச்சாரியார்களுக்கும் குருபீடங்களுக்கும் விடுத்த அறிவிப்பு அழைப்பு வேண்டுகோளே பயனின்றிப் போயிற்று என்பதை எண்ணியெண்ணிப் பார்த்தோம்.

எனவே இந்துமறுமலர்ச்சிஇயக்கத்தின் இரண்டாவது தலைவராகப் பொறுப் பேற்ற சித்தர் காகபுசுண்டர் வழிவந்த முடிகணத்து (இன்றைய திருச்சி மாவட்டத்துக் கரூர் வட்டத்-திலுள்ள முடி கண்ட சோழபுரம்) காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் ம. பழனிச்சாமிப்பிள்ளையாகிய யாம 'சைவ சித்தாந்த சாத்திர ஆசிரியர்கள்' என்ற தலைப்பிலும் 'சைவ சமயச் சந்தானச்சாரியார்கள்' என்ற தலைப்பிலும; சைவ சமயக் குரு பீடங்கள்' என்ற தலைப்பிலும்; 'சைவ சமயம் காத்த அருட் பேரரசர் நால்வர்' என்ற தலைப்பிலும; 'மெய்யான இந்துமதத்தை வடிவப் படுத்திக்காட்டிய சந்தானச்சாரியார்கள்' என்ற தலைப்பிலும்; 'மெய்யான இந்து மதத்துக்கும் பெய்யான ஹிந்து மதத்திற்கும் நிலையான ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கிய சந்தானச்சாரியார்கள் நால்வர்' என்ற தலைப்பிலும்; 'தமிழினத்திற்கும் பிருமணருக்கும் இடையே நிகழ்ந்து வரும் தத்துவப் போர்களின் தளபதிகளுள் நால்வர்' என்ற தலைப்பிலும்; 'மெய்யான இந்து மதத்தை புரிந்து கொள்ள நான்கு சாத்திர ஆசிரியர்கள்' என்ற தலைப்பிலும்; 'மெய்யான இந்து மதத்தின் அறிவியல் மேதைகள் நால்வர்' என்ற தலைப்பிலும் ...எண்ணற்ற கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும், உரையாடல்களையும் நிகழ்த்தி வந்தோம் இருந்தும் தூங்கிக் கொண்டிருக்கக் கூடிய தமிழர்களைத் தட்டியெழுப்ப முடியவில்லை; வட ஆரியமாயையில் சிக்கிக் கலங்கிக் குழம்பித் தவித்திடும் தமிழர்களை அம்மாயையிலிருந்து விடுவிக்க முடியவில்லை, விடுவிக்க முடியவில்லை;

சமசுக்கிருத மொழிக்கும் வட ஆரிய வேதமதந்துக்கும் பிருமணப் பண்டிதர்களுக்கும் அடிமையாகிக் கிடக்கின்ற சைவ சித்தாந்த மடாதிபதிகளையும், பீடாதிபதிகளையும், குருபீடங்களையும், புலவர்களையும், பத்தர்களையும், திருத்த முடியவில்லை எனவேதான் யாம், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர்பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக்கருவூரர் அவர்களின் கனவை நனவாக்கத் தன்னையீன்ற தந்தையையும் தானீன்ற மகவையையும் பிரிந்து மகூட தளராமல் தொடர்ந்து தமிழர் வாழ்வைப் பாதுகாப்பதற்காக மெய்யான இந்து மதத்துக்கு அரணாக கற்கோயில்களும், சொற்கோயில்களும். கட்டிய மாபெரும் அருளுலகச் செயல் வீரரான சித்தர் கருவூர்த் தேவரின் வரலாற்றை எழுதப் புகுந்தோம். அதாவது, 'மெய்யான இந்துமதம் காத்த கருவூர்த் தேவர் வரலாறு' என்ற எமது நூலில் மெய்யான இந்து மதத்தின் இரண்டாவது சந்தானச்சாரியாரும், பதினான்கு சைவ சமயச் சைவச்சித்தாந்தச் சாத்திர ஆசிரியர்-களுள் தலைசிறந்தவருமான அருளுலக அறிவியல் மேதை அருள்மிகு அருள் நந்தி சிவாச்சாரியாரைப் பற்றிய செய்திகளை கணிசமான அளவு இந்த நூலில் தந்திருக்கிறோம். எனவே, இந்த நூலிலேயே அவர் எழுதிய சிவஞான சித்தியர் பற்றியும், இருபா இருபதுபற்றியும் ஒரு மின்னல் வீச்சுக் கருத்து விளக்கம் வழங்கியிருக்-கிறோம்.

[தொடரும்]

7-ம் பக்கத் தொடர்ச்சி

அச்சிட்ட புத்தகங்கள், அறிக்கைகள்...... முதலியவைகளின் மூலமும் வளர்க்கப் பாடுபட வேண்டும்! பாடுபட வேண்டும்! பாடுபட வேண்டும்! பாடுபட்டேயாக வேண்டும்! இல்லாவிட்டால், நமது வருங் -காலச் சந்ததியார் தமது இருண்ட இன்னல்மிகு வாழ்க்கைக்குக் காரணமாக இருந்தவர்களின் பட்டியலில் நம்மையும் சேர்த்து வசை பாடிடுவார்கள்! வசைபாடிடுவார்கள்! வசைபாடிடுவார்கள்! இதனை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படமுற்படுங்கள்.

நண்ப! நாம் மாதாமாதம் (ரூ 1-00) ஒன்றுவிலையில் வெளியிட்டுவரும் குருதேவர் அறிக்கைகள் முப்பத்து மூன்றும்; நாம், வெளியிட்டுள்ள ஏழெட்டுப் புத்தகங்களும மட்டுமே போதும் நமக்கு. இவற்றை வைத்துக் கொண்டே; நாம், நமது வரலாற்றுப் பின்னணி, இலக்கியச் சான்று, கொள்கை வளம், குறிக்கோள் வலிமை, செயல்திட்டத் தெளிவு ... முதலியவற்றை உலகம் முழுவதற்கும் விளக்கியுரைத்திடலாம். அதாவது, நமது இயக்கத்துக் கென்று வரலாற்று உரிமையும இலக்கியப் பெருமையும், தத்துவ பாரம்பரியமும, செயல்சித்தாந்தச் செழுமையும் ... மிகமிகத் தெளிவாகவும் முறையாகவும் நிறையாகவும்...... இருப்பதை சுட்டிக்காட்டி விளக்கியுரைத்தே வானுற வளர்ந் -திடலாம் நாம். ஆனால், நம்மவர்களில்; முன்னணியில் உள்ளபலர்; நமது இயக்கத்தைத் தங்களின பொழுது போக்குச் சாதனமாகவே பயன் படுத்துகிறார்கள். அதாவது, 'பாம்பு சாகக் கூடாது; பாம்பை அடிக்கும் கம்பும கையும் நோகக்கூடாது' என்ற பழமொழிபடியே பலர் நமது இயக்கப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் இவர்கள் எல்லோருமே நல்லவர்கள்தான்! நல்லவர்கள்தான்! நல்லவர்கள்தான்! இருந்தாலும, இந்த, நல்லவர்கள் பெரும்பாலும ஏமாளிகளாகவு , சோம்பேறி -களாகவும், அப்பாவிகளாகவும், சுறுசுறுப்பில்லாதவர்களாகவுமே இருக்கின்றார்கள் எனவேதான் இவர்களில் யாரையுமே கண்டிக்க விரும்பவில்லை யாம ......இது பற்றித் தாங்களே நம்மவர்களோடு சிந்தியுங்கள்..... ....

நண்ப! பொறுப்பை உணர்ந்தவர்கள் கூடப் பொழுது போக்கும் சாதாரண மானவர்களாக மாறி வரும் நிலை நமது இயக்கத்துள்ளும் வளருகிறது. எனவே, நாம் தனிமனிதர்களை நம்பிப் பயனில்லை நாம் நமது தத்துவத்தை நம்பித்தான் செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டேயாக வேண்டும்! அதாவது கோபுரத்துப் பொம்மைகளுக்கும், கோபுரத்துக்கும் என்ன உறவு என்பதை விளக்கியுரைக்க வேண்டிய காலக்கட்டத்துக்கு வந்துவிட்டோம் நாம் எனவே, நாம், மீண்டும (பேனாவையும் பேப்பரையும்) எழுதுகோலையும் தாளையும் மட்டுமே நம்பி நமது பணிகளை தொடருவோம நாம் எதிர்பார்க்கும நாளும் ஆளும் நமக்குக் கிடைக்கும் வரை விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் ஆங்காங்கே அருட் கணிப்புக் கூறியும், அருள் வழங்கியும அருளுரை யாற்றியும் செயல்பட்டிட்டாலே போதும்! போதும்! போதும்! ஏனெனில், யாம், யாரையும் அடிக்கடி நேரிந்தரவு செய்து இயக்கப் பணிகளில் ஈடுபடுமாறும், இயக்கம் வளர்க்க இயன்ற உதவிகளைத் தருமாறும்... ... கேட்டுக் கொண்டே இருக்க இயலாது! அதாவது அவரவராக மனம் விரும்பி ஆற்றக் கூடிய பணிகளையும், தரக்கூடிய ஆதரவுகளையும், உதவிகளையும் பெற்றுச் செயல்பட்டால் போதும் நாம். எனவே, விரைவில் வில்லுப் பாட்டு நாடகம், கலை நிகழ்ச்சி......... முதலியவைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடப்போகிறோம் யாம். அது கண்டு 'நமது குருதேவரா இப்படியெல்லாம் இறங்கிச் செயல்படுகிறார்.........'' என்று வருந்தத் தேவையில்லை ஏனெனில், **நல்லவர்கள் நினைப்பது மட்டும் நடப்பதே இல்லை நம் நாட்டில்** என்ற குருபாரம்பரிய வாசகம் மெய்யாகி வருகிறது. எமக்கும் தோல்வி ஏற்பட்டிடுமோ?!?!... என்று எண்ணுகிறோம்... ஒதுங்குவோரும் பதுங்கு வோரும் பலராவதை உணர்க.

அன்பு,

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**



# இந்தியாவில் மார்க்சீயம் — 17

—சித்தர்

அவருடைய மேதைத்தன்மை மிகவும் ஒளி பெற்றுத்திகழ்ந்தது. கருத்துக் குருடர்களும், அவருடைய அறிவொளியை உணர்ந்து கூசினர். 1894 சனவரியில் எங்கல்சு இரசிய நாட்டுச் சமுதாய நிலையையும், அரசியல் நிலையையும் ஒப்பு நோக்கிய பல சிந்தனைகளை வெளியிட்டார். அவற்றின் தொகுப்பாகவும், சுருக்க விளக்கமாகவும் முன்பு 1875 இல் அவர் வெளியிட்ட 'இரசியாவில் சமூக உறவுகள்' என்ற கட்டு .ரைக்கு பின்னுரை ஒன்று எழுதினர். இதில் இரசிய அரசியல் வீழ்ச்சியை இழிவடையச் செய்யும் 'நரோத்னிக்குகளை' மிகத் தெளிவாக விளக்கியுரைத்து சாட்டையடிக் கொடுத்திட்டார்.

இது இரசியப் புரட்சியின் எழுச்சிக்கும் வெற்றிக்கும் மார்க்சீயச் சித்தாந்தம் பேருதவிபுரியும் முயற்சியின் துவக்கமாக - முன்னணிச் செயலாக அமைந்தது. 1894 நவம்பர் 15-22 இக் குறுகிய கால இடைவெளியில் எங்கல்சு 'பிரான்சிலும் செர்மனியிலும் உள்ள விவசாயப் பிரச்சினை' என்ற நூலை எழுதினர். இதில் இவர் விவசாயப் பிரச்சினையில் உள்ள சந்தர்ப்பவாதிகளையும் சந்தர்ப்பவாதக் கருத்துக் -களையும் [The Oppertunists and the oppertunism] கடுமையாக விமர்சித்தார் இவரது விமர்சனம் விவசாயப் புரட்சிக்கு மிகத் தெளிவாக வித்திட்டது. இப்புத்தகம் இன்று கூட உலக முழுவதுமுள்ள விவசாயப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மருந்தாக உள்ளது. விவசாயப் புரட்சியாளர்களுக்கு இந்நூல் ஒரு பெருவிருந்து.

1894 டிசம்பரில், 1883 இலிருந்து சுமார் பத்தாண்டுகாலம் கடுமையாக உழைத்த உழைப்பின் பயனைக் கார்ல் மார்க்சு கையெழுத்துப் பிரதியாக; தனித் தனிக் குறிப்புக்களாக, முழுமையற்ற நிலையில் விடுத்துச் சென்றிருந்த ''மூலதனம்'' நூலின் மூன்ருவது பகுதி அச்சேற்றி வெளிக் கொணரப்பட்டது. எங்கல்சு, இம்மா பெரும் பணி தனது உயிர்த்தோழனுக்குச் செய்திட்ட கடமை மட்டுமல்ல முக்கால உலகத் தொழிலாளவர்க்கத்திற்கும் செய்திட்ட மாபெரும் பணியாகும் தொழிலாளி வர்க்கம் பெற்றிட்ட அமுதக் கலசமே மூலதனம். மூலதனம், என்றென்றும் பாட்டாளி வர்ககத்தின் உயிர் மூச்சாக இருந்தே தீரும். வறுமையெனும் கொடிய நோயைப் போக்கும் அரிய மருந்தே 'மூலதனம்' இதனைத் தொடர்ந்து எங்கல்சு, மற்றொரு புகழ்ப் படைப்பான மார்க்சின் ''பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள் 1848 முதல் 1850 வரை'' என்ற நூல் 1895 மார்ச்சு 6-ஆம் தேதி வெளிவந்தது அப்பதிப்புக்கு முகவுரை எழுதினர். இதில் 1848 பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னுல் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் நிலைகளிலும், செயல் முறைகளிலும், சித்தாந்தங்களிலும் ......தொடர்ச்சியாக ஏற்படுத்தி வந்திட்ட மாறுதல்களை தெளிவாக விளக்குகின்ருர்.

[தொடரும்]

# ஞானப்பள்ளி

**[சாகாக்கல்விச் சாலை]**

பதினெண் சித்தர்கள் தங்களுடைய தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் நேரடிப் பயிற்சிகளின் மூலமே பெரும்பாலும் உலகுக்கு வழங்கிச் சென்றுள்ளார்கள். இதில் தனிமனிதக் கற்பனைகளாலும்; நினைவுக்குறைவு, வசதி வாய்ப்பின்மை, தனிமனித அகம்பாவம், ஆணவம் முதலியவைகளாலும் காலப்போக்கில் இடைச் செருகல்கள், இழப்புக்கள் சிதைவுகள், தேய்வுகள்...... முதலியவை ஏற்பட்டுவிடுவது இயற்கை. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இலக்கிய - இலக்கணங்களை எழுதி நிலவறைச் சொத்துக்களாக விட்டுச் சென்றுள்ளார்கள் இவற்றைப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றும் போதுதான் ஞானப்பள்ளிகள். சாகாக் கல்விச்சாலைகள் ..... போன்ற பலவகைப்பட்ட சித்தர் நெறிக்கல்வி நிலையங்களைத் தோற்றுவித்துச் செயல்படுகின்றார்கள் இதன்படி, இன்றுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், குவலய குருபீடம், அருளாட்சி நாயகம். ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தமிழகத்துக்குள் சில கல்வி நிலையங்களை நிறுவிச் செயல்பட விரும்புகின்றார். எனவே, ஆர்வமுள்ள தனிமனிதர்களோ, ஊர் பொதுமக்களோ குறிப்பிட்ட குறுகிய கால அளவிற்கு மட்டுமாவது [சுமார் மூன்று நாள் முதல் ஒரு வாரகாலம் வரை] 25 பேர்கள் முதல் 50பேர்கள் வரை தங்கித் தற்காலிகமாக சாகாக்கல்வி கற்றுக்கொள்வதற்கு இடவசதி, பொருள்வசதி, உணவுவசதிதர முடியுமென்றால் உடனே தலைமையகத்துடன் தொடர்பு கொள்க!

தத்துவ எழிச்சியே தனிமனித விழிச்சி!
தனிமனித விழிச்சியே சமுதாயச் செழிச்சி!

எனவே தத்துவப் புரட்சிக்காக உதவ விரும்புபவர்கள் தங்களால் இயன்ற உதவிகளைத் தொடர்ந்து அனுப்பிவைக்க வேண்டுகின்றேன். தங்களுடைய வட்டாரங்களில் இந்தப் பள்ளிகளை நடத்த விரும்புபவர்கள் தொடர்பு கொள்க!

தொடர்பு முகவரி:- **ஞாலகுரு சித்தர் கருவூரார்**
E.S.I. மருந்தகம்
செம்பியம்-600011.

---

# சேலம் மாவட்டத்தில் தருகுலத் திருவிழாவும் திருநாளும்

அருளாட்சி நாயகம், இந்துமதத்தந்தை, ஞானாச்சாரியார், குவலய குருபீடம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் சேலம் மாவட்ட வேம்படிதாளம் கிராமத்தில் நடைபெறும் தருகுலத்திரு விழாவிலும், திருநாளிலும் கலந்து கொள்கிறார். அனைவரும் இதனை மாநில மாநாடாக நினைத்து வருகை புரியுமாறு வேண்டப்படுகிறார்கள். டிசம்பர் 25-இல் வேம்படிதாளம், 26, 27, 28 இல் இராசீபுர வட்டாரம்.

---

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர். **சி. கவிக்குமார் B. Sc**
56, NGO காலனி, பொன்னேரி-601204

---

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி